வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 562 / ஆ4 / 2022 நாள் –03–2022

பொருள் பள்ளிக் கல்வித் துறை – வேலூர் மாவட்டம் – 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு இரண்டாம் திருப்புதல் தேர்வு தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 16 /conf/ 2021 நாள் 18–03–2021

•••••••••

மார்ச் 2022–ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு / இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் இரண்டாம் திருப்புதல் தேர்வின் அனைத்து பாடங்களுக்கான வினாத்தாட்களை வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து பாதுகாப்பாக தேர்வுகள் நடத்த அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது,.

இரண்டாம் திருப்புதல் தேர்விற்கான வினாத்தாள், அரசுப் பொதுத் தேர்வு வினாத்தாள் போன்றே அமையும் பொருட்டு, இணைப்பில் கண்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி தேர்வினை சிறந்த முறையில் நடத்திடுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** தேர்வுகள் நடத்துவதற்கான அறிவுரைகள்

(ஒப்பம்). க. முனுசாமி,
**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

**பெறுநர்**
அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. அனைத்து வினாத்தாள் கட்டுக்காப்பு மைய பள்ளி தலைமை ஆசிரியர்கள்

**தமிழ்நாடு அரசு**

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**

**வேலூர் மாவட்டம்.**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு /பத்தாம் வகுப்பு இரண்டாம் திருப்புதல் தேர்வு மார்ச் 2022**

**தேர்வுகள் நடத்துவதற்கான அறிவுரைகள்**

மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு மாநிலம் முழுவதும் இரண்டாம் திருப்புதல் தேர்விற்கு ஒரே மாதிரியான வினாத்தாள் வழங்கப்பட இருக்கிறது. திருப்புதல் தேர்வு நடத்துவது தொடர்பாக இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தின் **29.12.2021** மற்றும் **10.02.2022** நாளிட்ட கடிதங்களில் அறிவுறுத்தப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றி நடத்திடுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்வினை சீரிய முறையில் நடத்திடவும், வினாத்தாட்களை அனைத்துப் பள்ளிகளுக்கும் விநியோகம் செய்வது குறித்தான கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. மேல்நிலை / பத்தாம் வகுப்பிற்கான அனைத்துப் பாடங்களுக்கும் உரிய வினாத்தாட்கள் அடங்கிய A மற்றும் B என்ற வினாத்தாட்கள் தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மிகவும் மந்தணத்தன்மை வாய்ந்ததால், இதனைக் கையாளும் பொறுப்பு வினாத்தாள் கட்டுக்காப்பு மைய பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

2. அனைத்து வினாத்தாட்களிலும் பாடக்குறியீட்டுடன் A அல்லது B எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் அவற்றில் ஒவ்வொரு நாளும் எந்த வினாத்தாட்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தின் edwizevellore இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.

3. A மற்றும் B என்ற இரு வேறு வினாத்தாட்கள் உள்ள ஒவ்வொரு பாடத்திற்குமான வினாத்தாட்களை பொதுத்தேர்வுகளில் பின்பற்றுவது போன்றே 20 வினாத்தாட்கள் கொண்ட உறைகளாக ஒவ்வொரு பள்ளிக்கும் தேவையான எண்ணிக்கையில் வழங்கப்படவுள்ளது.

4. ஒவ்வொரு Packet –ன் மேலும் A மற்றும் B என்று குறிப்பிட்டு மேல்நிலை/இடைநிலைத்தேர்வு, பாடம், தேர்வு நடைபெறும் தேதி மற்றும் வினாத்தாட்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை (Label) தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

5. ஒவ்வொரு பள்ளிக்கும் தேவைப்படும் அனைத்துப் பாடத்திற்குமான வினாத்தாட்களை போதுமான எண்ணிக்கையில் உரிய பாதுகாப்புடன் வைக்க வினாத்தாள் கட்டுக்காப்பு மைய பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. ஒவ்வொரு தேர்வு நாளன்றும், முற்பகலில் நடைபெறும் தேர்விற்கு காலை 8.00 மணியளவிலும் பிற்பகலில் நடைபெறும் தேர்விற்கு காலை 11.30 மணியளவிலும் வினாத்தாட்களை பெற்று செல்ல அனைத்துப் பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்படுகிறது. எக்காரணங்கொண்டும் அனைத்துத் தேர்வுகளுக்கான வினாத்தாட்களை முன்கூட்டியே பள்ளிகளுக்கு மொத்தாமாக வழங்கக்கூடாது.

7. தேர்வு நடைபெறும் நாளுக்கு முன் எக்காரணம் கொண்டும் வினாத்தாட்கள் அடங்கிய Packet வழங்கப்படக்கூடாது.

8. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தேர்வு தொடங்குவதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்னர் பொறுப்பான நபரை தகுந்த அதிகார அளிப்புக் கடிதத்துடன் (Authorisation letter) வினாத்தாட்களைப் பெற்றிட அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

9. அவ்வாறு வினாத்தாள் காப்பீட்டு மையத்திலிருந்து வினாத்தாள் அடங்கிய கட்டுகள் பள்ளியை சார்ந்த உரிய நபரிடம் ஒப்படைப்பு செய்வதற்கான நேரப்பதிவுடன் சம்பந்தப்பட்ட நபர் அதனைப் பெற்றுக் கொண்டதற்கான நேரப்பதிவினையும் ஒரு பதிவேட்டில் பதியவும் இந்நடைமுறை சரியான முறையில் நடை பெறுவதை உறுதி செய்ய நம்பகம் வாய்ந்த ஒரு நபரை நியமித்து கண்காணிக்கவும் வினாத்தாள் கட்டுக்காப்பு மைய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

10. வினாத்தாட்கள் மிகவும் மந்தணத்தன்மை வாய்ந்தது என்பதால், அதனை எடுத்துச் செல்ல தகுந்த பாதுகாப்புடன் கூடிய வாகன ஏற்பாட்டை அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் /

முதல்வர்கள் செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். பேருந்திலோ அல்லது இருச்சக்கர வாகனத்திலோ எடுத்துச் செல்லுதல் கூடாது.

11. வினாத்தாட்களின் மந்தணத்தன்மை மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய தொன்றாகும். எனவே, ஒவ்வொரு நிலையிலும், வினாத்தாட்களின் மந்தணத்தன்மையை காக்குமாறும், இதில் சிறு தவறு ஏற்பட்டாலும் உரியவர்கள் மீது துறை ரீதியான கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

12. அனைத்துப் பள்ளிகளுக்கும் பொதுவான வினாத்தாட்கள் என்பதால், வினாத்தட்களின் மந்தணத்தன்மையைக் காப்பதில் ஏற்படும் தவறு, அனைத்து மாவட்டங்களையும் பாதிக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டும்.

13. தொழிற்கல்வி பாடப்பிரிவின் கீழ் வரும் செய்முறை தேர்வு மற்றும் 10–ம் வகுப்பு அறிவியல் பாடத்திற்கான செய்முறைத்தேர்வினைப் பொறுத்தவரை அந்தந்த பள்ளி அளவிலேயே தேதியினை நிர்ணயித்து நடத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

14. மேற்கூறிய அறிவுரைகளை தவறாது கடைப்பிடிக்குமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

15. தேர்வுக் கால அட்டவணையின்படிதான் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

(ஒப்பம்) க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்